# அஷ்டகவர்க்கத்தில் பலனை குறிகாட்டும் பரல்களின் அளவீடுகள்

வி. உமா*[1], Dr. கே. ஜோதிமணி[2]

*[1]முழு நேர ஆய்வாளர், [2]ஆய்வு நெறியாளர் இணை பேராசிரியர் மற்றும் துறை தலைவர்*

*[1,2] ஜோதிடவியல் துறை, விஸ்டாஸ், சென்னை, தமிழ்நாடு*

**மின்னஞ்சல்: vumaeduc@gmail.com*

**கட்டுரை சுருக்கம்** — சாதக பலன் நிர்ணயிப்பதற்கு பல்வேறு விதமான முறைகள் உள்ளன. அவற்றில், அஷ்டக வர்க்க கணித முறையும் ஒன்றாகும். அஷ்டகவர்க்க பரல்களின் கணக்கீடுகளைக் கொண்டு, சாதகப் பலன்களை மிக துல்லியமாக நிர்ணயிக்கலாம் என்று தொன்று தொட்டு வந்த பாரம்பரிய முன்னோர்களின் அனுபவ பூர்வமாக அறிய இயல்கிறது.

***திறவுச்சொற்கள்*** *— அஷ்டக வர்க்கம்- எட்டு விதமான கணிதம்; சர்வாஷ்டக வர்க்கம் -அட்டவணை வடிவில் அஷ்டக வர்க்கம் அமைப்பது; சேவகம் – சேவ; பந்தூகம் – உறவு; காதகம் – துன்பம்; பரல்கள் - சுப பலன்கள்.*

## 1. முன்னுரை

அஷ்டகவர்க்கம் என்னும் சமஸ்கிருதச் சொல்லுக்கு எட்டு விதமான பிரிவுகள் அல்லது பகுதிகள் என்பது பொருள் ஆகும். அஷ்டக வர்க்க முறை, துரிதமான, துல்லியமான பலன் கூறும் விதமாக அமைந்துள்ளது. அஷ்டவர்க்க கணிதப்படி நல்ல பலன்களை பிந்துக்கள் அல்லது பரல்கள் எனவும், அசுப பலன்களை ரேகா என்றும் அழைக்கப் படுகிறது.

## 2. அஷ்டக வர்க்கம் முறை ஜோதிட விளக்கம்

அஷ்டக வர்க்கம் என்றால் எட்டு வர்க்கம் என்று பொருள். அதாவது, சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய கிரகங்களுடன் லக்கினமும் சேர்ந்து எட்டு வர்க்கம் ஆகின்றது. அஷ்டகவர்க்க முறையில் கிரகம் மற்றும் ராசிகள் என்ற இரண்டு பரிமாணங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. லக்கினம் என்பது பாவகம் என்ற மொத்த பரிமாணத்தை ஒரே ஒரு அடையாளமாக அறியப்படுகிறது. இங்கே கோள்சாரம் மூலம் விளக்கப்படுகிறது.

அஷ்டக வர்க்கம் முறையில், ஒருவரது ஜனன காலத்தில் அமர்ந்த கிரகங்கள், ஓவ்வொரு ராசிக்கும் குறிப்பிட்ட சுப அல்லது அசுப பரல்களை அளிக்கின்றன. இது ஜனன கால அடிப்படையில் நிலையானது. கோச்சாரத்தில் ஒரு குறிப்பிட்ட கிரகம், குறிப்பிட்ட ராசியில் பயணிக்கும் போது அந்த ராசியில் ஏற்கனவே உள்ள பரல்களுக்கு ஏற்றவாறு நல்ல அல்லது கெட்ட பலனை அளிக்க வல்லது.

## 3. பராசரர் முறை ஜோதிட கணிப்பிற்கும் அஷ்டக வர்க்க முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்

பாரம்பரிய பராசர முறைக்கும் அஷ்டவர்க்க கணக்கீடு முறைக்கும் வேறுபாடுகள் உள்ளன. பராசர முறையில் 1 முதல் 12 பாவங்களில் 9 கிரகங்கள் நின்ற பலனும் அந்த கிரகங்களின் பார்வையின் அடிப்படையில் பலன்கள் நிர்ணயிக்கப்படுகிறது. பராசர முறையில், ஆதிபத்திய அடிப்படையில் ஆட்சி, உச்சம், நீசம், பகை, நட்பின் அடிப்படையில் அதன் தன்மைகளை காரணிகளாகக் கொண்டு பலன்கள் தீர்மானிக்கப் படுகின்றன. ஆனால்



DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131004

அஷ்டகவர்க்க கணக்கீடு முறையில் ஒரு ராசி அல்லது பாவம் பெறுகின்ற 'பரல்' எண்ணிக்கையின் அடிப்படையில் அந்த பாவத்தையோ அல்லது அந்த வீட்டின் வலிமையையோ பரல்களினால் சுட்டி காட்டப்படுகிறது. எனவே, ஒரு வீட்டின் வலிமையை பாவத்தில் நின்ற கிரகங்கள் நிர்ணயிப்பதில்லை. அந்த ராசியோ அல்லது பாவமோ பெற்ற பரல்களின் அடிப்படையிலேயே வலிமை நிர்ணயிக்கப் படுகிறது.

பராசர ஜோதிட முறையில், பலன்கள், ஒரு கிரகம் எப்போது தனது சொந்த அல்லது நட்பு அல்லது உச்ச வீடுகளில் அமர்கிறதோ அப்போது நற்பலன்களை அளிக்கும். அதற்கு மாறாக ஒரு கிரகம், அஸ்தங்கம் அடைந்தாலோ, பகை அல்லது நீச்ச வீடுகளில் அமர்ந்தாலோ அல்லது தீய கிரகத்தின் சேர்க்கையிலோ, பார்வையிலோ, அமரும்போது, அந்த கிரகம், தான் கொடுக்க வேண்டிய நல்ல பலன்களுக்கு பதிலாக எதிர் பலன்களையே தருகின்றன.

அஷ்டக வர்க்கத்தில், சுப கிரகம், அசுப கிரகம், கிரகங்களின் வக்கிரகதி, நேர்கதி, நட்பு, பகை, உறவு, கிரகம் நின்ற நசஷத்திரம், அஸ்தங்கம், உச்சம், நீச்சம், மூல திரிகோணம், சேர்க்கை, பார்வை, பரிவர்த்தனை போன்றவைகள் கணக்கில் கொள்ளப்பட மாட்டாது.

## 4. பரல்களே பலனை காட்டும் குறிகாட்டிகள்

கோள்கள் ஒவ்வொரு பாவங்களுக்கும் கொடுக்கும் மொத்த பிந்துக்கள் 337 ஆகும்.

| சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
|---|---|---|---|---|---|---|
| 48 | 49 | 39 | 54 | 56 | 52 | 39 |

குரு, புதன், சுக்கிரன் ஆகிய மூன்று கிரகங்கள் சற்று அதிகப்படியான பரல்களை பாவங்களுக்கு அளிக்கின்றன. ஆனால், சனியும் , செவ்வாயும் குறைவான பரல்களையே தருகின்றன.

### 4.1 அஷ்டகவர்க்கம் பொதுப் பலன்கள்

ஒரு கிரகம் ஒரு ராசியில் 5 பரல்கள் அல்லது அதற்கு மேலும் பரல்கள் கொடுத்திருந்து அந்த ராசியில் 28 பரல்களும் அல்லது அதற்க்கு மேலும் இருந்தால் நல்ல சுப பலன்களைத் தரும்.

ஒரு கிரகம் 4 அல்லது 4க்கும் குறைவானப் பரல்களை பெற்று குறிப்பிட்ட பாவத்தில் அந்த கிரகம் ஜனன கால அட்டவணையில் உச்சம் பெற்றாலும் சுப பலன்களைத் தராது.

### 4.2 கிரகங்களின் சுப, அசுப பலன்களை பரல்களைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது.

பொதுவாக, கோட்சார பலன்கள் சந்திரனை மையமாக வைத்துதான் கணக்கிடப்படுகின்றன. அவ்வாறு கணக்கிடப்படும் போது இது கோட்சார அஷ்டகவர்க்க முறையை அடிப்படையாக கொண்டதேயாகும். அதாவது சந்திரன் நின்ற ராசியிலிருந்து கணக்கிட சூரியன், சந்திரன், செவ்வாய், குரு, புதன், சுக்கிரன், சனி, ஆகிய ஏழு கிரகங்களும் எந்தெந்த பாவகங்களுக்குத் தங்களுடைய பரல்களைத் தருகின்றன என்ற அட்டவணையின் மூலம் காண்போம்

சந்திரன் நின்ற வீட்டிலிருந்து கணக்கிட 3,6,10,11ம் பாவங்களுக்கு சூரியன் வரும் போது தன்னுடைய பரல்களைத் தருவார். கோட்சாரத்தில் சூரியன் இந்த பாவங்களுக்கு வரும் போது மட்டும் நன்மையைச் செய்வார். மற்ற பாவங்களுக்கு தீமையைச் செய்வார். சந்திரன் நின்ற வீடு முதல் கணக்கிட எந்தெந்த பாவங்களுக்கு கிரகங்கள் தங்கள் பரல்களைத் தருவார்கள் என்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.


DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131004

| சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் | குரு | சுக்கிரன் | சனி |
|---|---|---|---|---|---|---|
| 3,6,10,11 | 1,3,6,7,10,11 | 3,6,11 | 2,4,6,8,10,11 | 2,5,7,9,11 | 1,2,3,4,5,8,9,11,12 | 3,6,11 |

மேற்கண்ட அட்டவணையின் வாயிலாக கிரகங்களின் பரல்களை விரிவாக கண்டறிய இயல்கிறது. சுக்கிரன் அதிகப்படியாக 12 பாவங்களில் 9 பாவங்களுக்கு நன்மையையும் 3 பாவங்களுக்கு தீமையையும் செய்கிறார்.

செவ்வாயும், சனியும் 12 பாவங்களில் 9 பாவங்களுக்கு தீமையையும் 3 பாவங்களுக்கு மட்டும் நன்மையை செய்கிறார்கள்.

## 5. பலன் கூறுவதின் அடிப்படை அடிப்படை விதிகள்

அஷ்டவர்க்கம் என்பதின் 8 விதமான வர்க்கங்கள் என அறியப்படுகிறது. எட்டு விதமான கணிதங்களைக் கொண்டு ஒரு சாதகத்தில் அனைத்து பாவக பலன்களையும் மற்றும் பாவக பலன் நடைபெறும், காலத்தையும் துல்லியமாக அறியலாம். கோள் சாரப்படி கோள் தரக்கூடிய பலன்களையும் மிகக் சரியாக துல்லியமாக கணிக்க இயலும். இவ்வாறு, கிரகங்கள் வழங்கும் பரல்களை, ராசிகள் சேமித்து வைக்கும் விதமாக அமைந்துள்ளன.

அஷ்டக வர்க்கத்தில் ராகு, கேது போன்ற நிழல் கிரகங்களுக்கு இடம் இல்லை. ஒவ்வொரு ராசிக்குள் கிரகம் நின்ற நட்சத்திரமோ அல்லது பாகையோ கணக்கில் கொள்ளப்பட மாட்டாது. ராசியில் கிரகங்கள் இட்ட பரல்களின் அடிப்படையில் துல்லிய பலன்களை எடுக்க இயலும். சுப பரல்கள் பிந்து எனவும் அசுப பரல்கள் ரேகா எனவும் அழைக்கப் படுகிறது.

## 6. அஷ்டவர்க்க கணக்கீட்டு விளக்கங்கள்

அஷ்டக வர்க்கத்தின் கணக்கு பிரிவுகளை கீழ் கண்டவாறு அறியலாம்

1. சமுதாயம் அல்லது சமுதாய அஷ்டக வர்க்கம் திரிகோணம்
2. ஏகாதிபத்தியம்
3. குண சமூகம்
4. ராசி குணாகரம்
5. கிரக குணாகரம்
6. சுத்த பிண்டம்
7. ஏக சமூகம்

### 6.1 சமுதாய அஷ்டக வர்க்கம்

ஒவ்வொரு கோளும், தாம் நிற்கும் ஸ்தானத்தில் இருந்து சில குறிப்பிட்ட இடங்களில் இடும் பிந்துக்களை, ஒரு அட்டவணை வடிவில் அமைப்பதே பிரஸ்தார அஷ்டக வர்க்கம் ஆகும். அஷ்டக வர்க்க கணிதத்தில் மொத்தம் 337 பிந்துக்கள் உள்ளன. இந்த 337 பிந்துக்களையும் 7 கோள்களுக்கும் சில குறிப்பிட்ட எண்ணிக்கை அளவுக்கு பிரித்து கொடுக்கப் பட்டுள்ளன.

### 6.2 திரிகோண சோதனை

ஜாதகப்படி உள்ள பின்னாஷ்டக வர்க்க பரல்களை சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ஆகிய கோள்களுக்கு விதி முறைகளின் படி சோதனை செய்தலே திரிகோண சோதனை ஆகும். திரிகோணங்களின் உள்ள பரல்களைக் கொண்டு ஒருவரின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்ளலாம். மேலும், திரிகோணங்களை கீழ்கண்டவாறு அறியலாம்.


DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131004

| | |
|---|---|
| மேஷம்+ சிம்மம்+ தனுசு | தர்ம திரிகோணம் |
| ரிஷபம் +கன்னி+மகரம் | அர்த்த திரிகோணம் |
| மிதுனம்+ துலாம்+ கும்பம் | காம திரிகோணம் |
| கடகம்+ விருச்சிகம்+ மீனம் | மோசக்ஷ திரிகோணம் |

### 6.3 ஏகாதிபத்திய சோதனை

திரிகோண சோதனை செய்த பிறகு சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய கோள்களுக்கு விதி முறைகளின் படி ஏகாதிபத்திய சோதனை செய்ய வேண்டும்.

### 6.4 குண சமூகம்

திரிகோண சோதனைக்குப் பின் உள்ள பிந்துக்களையும், ஏகாதிபத்திய சோதனைக்குப் பின் உள்ள பிந்துக்களையும் மொத்தமாக கூட்டுவது குண சமூகம் ஆகும்.

### 6.5 ராசி குணாகாரம் அல்லது ராசி பிண்டம்

ஒவ்வொரு கோளுக்கும் திரிகோண மற்றும் ஏகாதிபத்திய சோதனை செய்த பின்பு இரண்டு விதமான கணக்கீடுகளை செய்ய வேண்டும்.

### 6.6 கிரக குணாகாரம் அல்லது கிரக பிண்டம்

ஒரு கோள் இருக்கும் ராசியில் உள்ள பிந்துக்களை அந்த கோளின் குணாகர எண்ணை கொண்டு பெருக்க வேண்டும். இவ்வாறு, பெருக்குவதற்கு ஏகாதிபத்திய சோதனைக்கு பிறகு உள்ள பிந்துக்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.

### 6.7 சுத்த பிண்டம் அல்லது சோத்திய பிண்டம்

ராசி பிண்டத்தையும் கிரக பிண்டத்தையும் கூட்டினால் சுத்த பிண்டம் அல்லது சோத்திய பிண்டம் கிடைக்கும்.

### 6.8 ஏக சமூகம்

ஆதி பரல் முதல் (சமுதாய அஷ்டக வர்க்கம்) கிரக பிண்டம் வரை கூட்டுவதனால் கிடைப்பது ஏக சமூகம் ஆகும்.

## 8. கணக்கேடுகளே கர்மாவின் கொடுப்பினை

### 8.1 பரல்கள் கர்ம கொடுப்பினை

சமுதாயம் அல்லது சமுதாய அஷ்டக வர்க்கத்தில், ஒவ்வொரு கோளும் தாம் நிற்கும் இடத்தில் இருந்து சில குறிப்பிட்ட இடங்களில் பிந்துக்கள் கொடுக்கின்றன. இதையே ‘கர்ம கொடுப்பினை’ என அறியலாம். சில இடங்களில் கிரகங்கள் பரல்கள் இடாமலும் செல்கின்றன. சில இடங்களில் மிக அதிக பரல்களும் கொடுக்கின்றன. இருப்பினும் ஓர் முக்கியமான குறிப்பு என்னவெனில் கிரகங்கள், பரல்களை ராசிக்கே கொடுக்கின்றன. கிரகங்கள் மற்ற கிரகங்களின் அடிப்படையில் பரல்களை கொடுப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட ஸ்தானத்தில் எல்லா கோள்களும் கொடுத்த பிந்துக்களையும் கூட்டுவது சமுதாய அஷ்டக வர்க்கம் ஆகும்.

### 8.2 பரல்கள் மூலம் பலனைத் தீர்மானித்தல்

பிரசன்ன மார்க்கம் என்னும் பழம் பெரும் ஜோதிட நூலில் 12 பாவங்களில் இருக்க வேண்டிய பரல்களை கீழ்கண்ட அட்டவணைப்படி விளக்குகிறது. குறைந்தபட்ச அளவினை விட ஒரு பாவத்தில் பரல்கள் குறைவாக இருந்தால் பாவங்கள் செழிக்காது. ஆனால் பரல்கள் அதிகமாக இருந்தால் அவை செழிக்கும்.

| | | | |
|---|---|---|---|
| லக்கினம் | 25 | 7ம் பாவம் | 19 |
| 2ம் பாவம் | 22 | 8ம் பாவம் | 24 |



DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131004

| | | | |
|---|---|---|---|
| 3ம் பாவம் | 29 | 9ம் பாவம் | 29 |
| 4ம் பாவம் | 24 | 10ம் பாவம் | 36 |
| 5ம் பாவம் | 25 | 11ம் பாவம் | 54 |
| 6ம் பாவம் | 34 | 12ம் பாவம் | 16 |

மொத்தம் 337 பரல்கள்


### 8.3 பாவக காரகத்துவங்களும் 337 பரல்களின் அளவீடுகள்

| | | |
|---|---|---|
| 1ம் பாவகம் | லக்கினம், உயிர், ரூபம், திறமை | 26 உத்தமம் |
| 2ம் பாவகம் | தனம், வாக்கு, அதிர்ஷ்டம், கையிருப்பு பணம், குடும்பம் , நேத்திரம் | 33 அதி உத்தமம் |
| 3ம் பாவகம் | முயற்சி, உடல் சக்தி, வீரம், இளைய சகோதரம், குரல் | 30 உத்தமம் |
| 4ம் பாவகம் | மகிழ்ச்சி, உறவினர், வீடு, வாகனம், தாயார், சுகம், வித்தை | 34 அதி உத்தமம் |
| 5ம் பாவகம் | புத்திரம், பூர்வ புண்ணியம் உறவினர்கள், புகழ், கீர்த்தி | 35 அதி - உத்தமம் |
| 6ம் பாவகம் | எதிரிகள்,காயம், உத்தியோகம் | 28 உத்தமம் |
| 7ம் பாவகம் | பிரயாணங்கள், களத்திரம், கூட்டாளி, உறவினர்கள் | 26 உத்தமம் |
| 8ம் பாவகம் | உடல், மனக் கோளாறு, மரணம், அழிவு, திடீர் அதிர்ஷ்டம் | 20 மத்திமம் |
| 9ம் பாவகம் | குரு,அதிர்ஷ்டம்,தர்ம காரியம், தந்தை,தீர்த்த யாத்திரை | 28 உத்தமம் |
| 10ம் பாவகம் | தொழில்,ஜீவனம்,புகழ்,கர்மம் | 25 உத்தமம் |
| 11 ம் பாவகம் | செல்வம், லாபம், மூத்த சகோதரம் | 27 உத்தமம் |
| 12 ம் பாவகம் | செலவுகள், நஷ்டம், சயனம், போகம், மோக்ஷம் | 25 உத்தமம் |

ஒவ்வொரு கோளும் ஜனன ஜாதகத்தில் ராசியில் தாம் நின்ற இடத்தில் இருந்து பரல்கள் அளிக்கின்றன.

இவ்வாறு லக்கினம், மற்ற அனைத்து கோள்களின் பின்னாஷ்டக வர்க்க பரல்களை காண இயல்கிறது.

உதாரண ஜாதகம்: 1




சர்வாஷ்டக அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| 36 | 38 | 19 | 26 |
| 21 | | | 35 |
| 25 | | | 38 |
| 20 | 27 | 21 | 31 |

பின்னாஷ்டக அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| 36 | 38 | 19 | 26 |
| 21 | சர்வ | | 35 |
| 25 | | | 38 |
| 20 | 27 | 21 | 31 |

| | | | |
|---|---|---|---|
| 7 | 4 | 1 | 5 |
| 3 | லக்னம் | | 4 |
| 4 | | | 5 |
| 5 | 5 | 2 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 4 | 6 | 4 | 2 |
| 3 | சூரி | | 6 |
| 5 | | | 5 |
| 2 | 3 | 4 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 8 | 5 | 4 | 3 |
| 3 | சந் | | 5 |
| 2 | | | 7 |
| 3 | 4 | 2 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 5 | 0 | 4 |
| 2 | செவ் | | 4 |
| 3 | | | 5 |
| 3 | 2 | 2 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 6 | 5 | 1 | 4 |
| 5 | புத | | 7 |
| 6 | | | 5 |
| 2 | 5 | 2 | 6 |

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | 2 | 6 |
| 3 | குரு | | 6 |
| 2 | | | 4 |
| 7 | 5 | 3 | 5 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 5 | 5 | 4 |
| 4 | சுக் | | 4 |
| 5 | | | 6 |
| 2 | 4 | 4 | 6 |

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 3 | 3 |
| 1 | சனி | | 3 |
| 2 | | | 6 |
| 1 | 4 | 4 | 3 |


DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131004

அஷ்டவர்க்க கணிதத்தை கொண்டு ஒருவரின் ஆயுள், பணம் வரும் காலம், செல்வநிலை, திருமணம் நிகழும் காலம், ஆகியவைகளை துல்லியமாக அறிய இயலும். அஷ்டவர்க்கத்தைக் கொண்டு செல்வ வளம் கொடுக்கும் திசைகளை கண்டறியலாம். அதிக பிந்துக்கள் உள்ள ராசிகள் குறிக்கும் திசையில் ஜாதகருக்கு அதிகமான செல்வம் கிடைக்கும்.

## 9. அஷ்டவர்க்கத்தில் திசைகளின் சூட்சுமங்கள்

பாவகங்கள் பெற்ற பரல்கள் அடிப்படையிலும், அந்தப் பாவகத்தின் திசை அடிப்படையிலும், குறைந்தபட்ச அளவை விட போதுமான பரல்களுக்கு அதிகமாக பரல்கள் பெற்று வலிமை அடைந்தால், அந்த பாவகம் சுட்டிக்காட்டும் திசையின் மூலமாக செல்வ நிலை பெறுவார் என அனுபவமாக இருக்கிறது. மேலே குறிப்பிட்டுள்ள ஜாதகத்தில், சர்வாஷ்டக பரல்களின் திசையை அடிப்படையில், செல்வம் வளம் கிடைக்கும் திசையை கீழ்கண்டவாறு கண்டறியலாம்.

## 10. திரிகோணங்களில் அஷ்டகவர்க்கத்தின் பங்கு

ஜோதிடத்தில் பாவகங்களின் வலிமை, செயல்பாடு, மற்றும் வாழ்வின் வளர்ச்சி போன்றவற்றை திரிகோண வீடுகள், உப ஜெய, பணபர வீடுகள் பெறும் பரல்களின் அடிப்படையில் ஒருவரது வாழ்க்கை முறையைக் கண்டறிய இயலும். ஒருவரது ஜனன கால சாதகத்தின் லக்கின பாவகத்தில் இருந்து திரிகோண, உப ஜெய, பணபர, ஆபோக்கிலீம பாவகங்களின் பரல்களைக் கொண்டு துல்லியமாக வாழ்வு முறையைக் கண்டறிய இயலும்.

| | |
|---|---|
| மேஷம்-சிம்மம்-தனுசு | கிழக்கு |
| ரிஷபம்- கன்னி- மகரம் | தெற்கு |
| மிதுனம்- துலாம்- கும்பம் | மேற்கு |
| கடகம்- விருச்சிகம் -மீனம் | வடக்கு |

| பாவகங்கள் | சர்வாஷ்டக பரல்கள் | திசை |
|---|---|---|
| 1ம் பாவம் + 5ம் பாவம் +9ம் பாவம் | 26+21+21=68 | கிழக்கு |
| 2ம் பாவம் + 6ம் பாவம் +10ம் பாவம் | 35+27+36=98 | தெற்கு |
| 3ம் பாவம் + 7ம் பாவம் +11ம் பாவம் | 38+20+38=96 | மேற்கு |
| 4ம் பாவம் + 8ம் பாவம் +12ம் பாவம் | 31+25+19=75 | வடக்கு |

மேலே உள்ள அட்டவணையின் படி, ஜாதகருக்கு, தெற்கு திசையில் இருந்து அதிக லாபம் கிடைக்கும், அதற்கு அடுத்தப்படியாக, மேற்கு திசையிலிருந்தும் தன பிராப்தி அடையலாம் என அறியலாம்.

| | |
|---|---|
| 1-5-9 | திரிகோண வீடுகள் |
| 3-6-10-11 | உப ஜெய வீடுகள் |
| 2-5-8-11 | பணபர வீடுகள் |
| 3-6-9-12 | ஆபோக்கிலீம வீடுகள் |

## 11. பன்னிரண்டு பாவங்களை நான்கு பிரிவுகளாக பிரித்து அதற்கேற்றவாறு ஒருவரின் வாழ்வு, செல்வ நிலை, குணாதிசியங்களை கண்டறியலாம்.

| | |
|---|---|
| பந்தூக பாவம் | லக்கினம்(1) மற்றும் 5 வது, 9வது வீடுகளில் உள்ள பிந்துக்களின் தொகை |
| சேவக பாவம் | 2வது 6வது மற்றும் 10 வது வீடுகள் |
| போஷக பாவம் | 3வது, 7வது மற்றும் 11வது வீடுகள் |
| காதக பாவம் | 4, ,8 மற்றும் 12வது வீடுகள் |

*i. பந்தூக பாவகத்தின்* பரல்களின் கூட்டுத் தொகை அதிகமாக இருந்தால்: ஜாதகர் சுதந்திரமான, தர்ம ஸ்தாபன காரியங்கள் மற்றும் பெரும் செல்வந்தர், பந்துக்களின் வாயிலாக நற் பயன்கள் அடைவார் என அறியலாம்.

*ii. சேவக பாவக* பரல்களின் கூட்டுத் தொகை அதிகமாக இருந்தால், ஜாதகர் வேலை மற்றும் நிர்வாக திறமை மிக்கவராக அதிக தனம் ஈட்டுபவராக



DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131004

இருப்பார் என அறியலாம். பணபர ஸ்தானங்கள் பொருளாதாரத்துக்கு உதவும் பாவங்கள் என அறியலாம்.

*iii.போஷக பாவக* பரல்கள் அதிகமாக இருந்தால் செல்வந்தர் என கொள்ளலாம்.

*iv. காதக பாவங்கள்* 73க்கு அதிகமாகாமல் இருந்தால், ஜாதகருக்கு மகிழ்ச்சி நிலைத்து மற்றும் கடன் மற்றும் எதிரிகளால் தொல்லை இல்லை என அறியலாம்.

<u>உதாரண ஜாதகம் – 2</u>




<u>சர்வாஷ்டக பரல்கள் மற்றும் கோள்களின் அஷ்டகவர்க்க பரல்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| 29 | 28 | 30 | 27 |
| 26 | சர்வ | | 24 |
| 27 | | | 19 |
| 37 | 34 | 26 | 30 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 5 | 4 | 4 |
| 5 | லக்னம் | | 4 |
| 4 | | | 3 |
| 4 | 4 | 4 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 4 | 3 | 4 | 4 |
| 4 | சூரி | | 2 |
| 5 | | | 3 |
| 5 | 6 | 4 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 7 | 4 | 3 |
| 1 | சந் | | 5 |
| 4 | | | 4 |
| 5 | 5 | 4 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 4 | 4 | 3 | 4 |
| 3 | செவ் | | 3 |
| 3 | | | 1 |
| 5 | 5 | 1 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 3 | 6 | 5 |
| 4 | புத | | 3 |
| 6 | | | 1 |
| 6 | 6 | 4 | 5 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 5 | 4 | 5 |
| 4 | குரு | | 4 |
| 3 | | | 4 |
| 6 | 4 | 7 | 5 |

| | | | |
|---|---|---|---|
| 6 | 4 | 5 | 4 |
| 6 | சுக் | | 3 |
| 4 | | | 3 |
| 5 | 4 | 3 | 5 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 2 | 4 | 2 |
| 4 | சனி | | 4 |
| 2 | | | 3 |
| 5 | 4 | 3 | 4 |

மேற்கண்ட ஜாதகத்தில் அமைந்துள்ள சர்வாஷ்டக பரல்கள் அட்டவணையில் எந்த திரிகோணம், அதிக பரல்களைப் பெற்றுள்ளது என முதலில் கண்டறிய வேண்டும்.

பந்தூக பாவம் 79 பரல்களையும், சேவக பாவகம், காதக பாவம் இரண்டும் 87 பரல்களை ஒரே மாதிரியாக பெற்றுள்ளது. போஷக பாவகம் 84 பரல்களைப் பெற்று ஜாதகரின் வாழ்க்கை சராசரி வருமானம், மகிழ்ச்சி மற்றும் கடன் நிறைந்துள்ளதாக உள்ளது என கண்டறிய இயல்கிறது.

## 12. கோள்களின்..பரல்களும் அஷ்டகவர்க்கத்தில் வளம் காணும் நிலைகள்

*i. குரு பின்னாஷ்டக வர்க்கம் மூலம் தொழில்கள் அறிதல் :* குரு ஒரு ராஜகிரகம். எனவே குரு பின்னாஷ்டக வர்க்கத்தில் 2 மற்றும் 10ம் பாவகத்தில் உள்ள பரல்களை கூட்டி, குரு இருக்கும் ராசியில் உள்ள பரல்களால் பெருக்க வேண்டும். பெருக்கி வந்த தொகை, சர்வாஷ்டக வர்க்கத்தில் 11ம் பாவகத்தில் உள்ள பரல்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருந்தால், ஜாதகர் தனது வியாபாரத்திற்கு அப்பாற்பட்ட துறைகளிலும் லாபம் சம்பாதிப்பர் என அறிந்து கொள்ளலாம்.

*ii. சுக்கிரன் பின்னாஷ்டக வர்க்கம் மூலம் செல்வ நிலை அறிதல்:* சுக்கிரன் பின்னாஷ்டக வர்க்கத்தில், அதிகப் பரல் பெற்ற ராசிகளில், சுக்கிரன் கோட்சாரரீதியாக சஞ்சரிக்கும் காலம், நிலம் வாங்குதல், கட்டிடங்கள், செல்வச் சேர்க்கை போன்ற நற்பலன்கள் நடைபெறும்.

*iii. சனி பின்னாஷ்டக பரல்கள் மூலமாக வளங்களை அறிதல் :* சனி பின்னாஷ்டக வர்க்கத்தில், மொத்த பரல்கள் 37 ஆக இருந்தால் ஒரு பாவத்தில், 4 பரல்கள் இருப்பது போதுமான பலமுடன் இருக்கிறது என்று கொள்ளலாம். ஒரு பாவத்தில் 5 முதல் 8 பரல்களுடன்


DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131004

சனி இருந்தால் சாதகர் மக்கள் தலைவர், செல்வந்தர், வாழ்க்கையில் அனைவரை விட முன்னணியில் இருப்பார்.

*iV. புதன் தரும் பரல்களால் கிடைக்கும் வளங்கள் :* புதன் கேந்திர திரிகோணங்களில் 8 பிந்துக்களுடன் இருந்தால் குடும்பத்தில் பரம்பரை பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதில் தேர்ந்தவராகவும், குடும்பத்தில் பாரம்பரிய வியாபாரத்தில் மிகவும் புகழ் பெற்று உயர் நிலைக்கு செல்பவராகவும் இருப்பார்.

*V. சந்திரன் தரும் பரல்களால் கிடைக்கும் வளங்கள் :* சந்திரன் அஷ்டகவர்க்கத்தில் 6ம் பாவத்தில் அல்லது 11ஆம் பாவத்தில் 6 பிந்துக்களுடன் நின்றால் சாதகர் பெரிய செல்வந்தர் ஆவார். குரு சம்பந்தப்பட்டால் பெரிய கொடையாளியாக இருப்பார்.

*Vi. சூரியன் தரும் பரல்களால் கிடைக்கும் வளங்கள் :* சூரியன் பின்னாஷ்டக வர்க்கத்தில் புதன் நின்ற ராசியில் 5 அல்லது 5க்கும் மேற்பட்ட பரல்கள் இருந்தால் சாதகர் கடின உழைப்பாளர். அதே போல் செவ்வாய் நின்ற ராசியில் 5 அல்லது அதற்க்கு மேற்பட்ட பரல்கள் இருந்தால் சாதகர் மருத்துவம் சம்பந்த தொழிலில் சிறந்து விளங்குவார்.

## 13. முடியுரை

அஷ்டகவர்க்க பரல்கள் , ஜாதகத்தில் ஒரு வீட்டின் பலன், அந்த வீடு பெற்ற பரல் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளதால் குறிப்பிட்ட பாவகத்தின் வலிமையை ஜாதகர் பெறுகிறார் என்பது ஜோதிட அனுபவமாகத் தெரிகிறது. இந்த கணக்கீடு முறையில் குறி காட்டிகளாக பரல்கள் அமைவதால், பாவக காரக வலிமை துல்லியமாக நிர்ணயிக்கப் படுகிறது. எனவே, இந்த கணக்கீடு முறையில் துரிதமாகவும் பலன்களை நிர்ணயிக்க முடியும் என்பதை தெள்ள தெளிவாக புலனாகிறது. மேலும் ஜோதிடப் பலன்கள், பரல்கள் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதால் அஷ்டகவர்க்க பரல்கள் ஒர் கலங்கரை விளக்கமாக திகழ்கிறது.

## பார்வை நூல்கள்

[1] ஜோதிட சகல அதிகாரம் - புலிப்பாணி சுந்தர வரதாச்சாரியார் - ஆனந்த நிலையம் , சென்னை – 2012.

[2] அஷ்டவர்க்கமும் ஆயுர் தாயமும் -அல்லுர் வெங்கடராம ஐயர்- ஆனந்த நிலையம் , சென்னை – 2021.

[3] ஆராய்ச்சி திரட்டு -இரண்டாம் பாகம் - ஆத்தூர் மு மாதேஸ்வரன் - வாசன் பதிப்பகம், சென்னை – 2021.

[4] மகரிஷிகளின் ஜோதிட சூட்சுமங்கள் - சித்த யோகி சிவதாசன் - அரோமீரா பதிப்பகம் – 2012.



DOI: 10.30726/ijlca/v13.i1.2026.131004